**சுருக்கம்**

அரசு அறிவிப்புகள் – பள்ளிக் கல்வித் துறை – பொது நூலகங்கள் – தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்கள் – சிறப்பு காலமுறை ஊதியம் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (கே1) துறை**

அரசாணை (நிலை) எண். 308 நாள்: **30.11.2009**

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.234, நிதித் (ஊதியக் குழு) துறை, நாள் 01.06.2009.
2. பொது நூலக இயக்குநர் கடிதம் ந.க.எண்.19349/அ1/09, நாள் 27.08.2009.

------

**ஆணை:-**

2009-2010-ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது ‘‘ஊர்ப்புற நூலகர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூ.1500/- தொகுப்பூதியம் மாற்றம் செய்யப்பட்டு 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் ரூ.2500-5000+ரூ.500/- தர ஊதியம் என்ற சிறப்பு காலமுறை ஊதியம் (Special Time Scale of Pay) வழங்கப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.5.28 கோடியாகும்.’’ என்று சட்ட மன்றப் பேரவையில் அரசினால் அறிவிக்கப்பட்டது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பொது நூலகத் துறையில் தற்போது செயல்பட்டுவரும் 1727 ஊர்ப்புற நூலகங்களில் பணிபுரியும் ஊர்ப்புற நூலகர்கள் தங்களுக்கு நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து தற்போது வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியம் ரூ.1500/- போதுமானதாக இல்லை என கோரிக்கை வைத்து அதனை உயர்த்தி வழங்குமாறு கேட்டுள்ளனர் எனவும், இவர்களுக்கு வேறு எந்த படிகளும் வழங்கப்படுவதில்லை என்றும், ஊர்ப்புற நூலகங்களில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்களின் பணி சிறப்பானதாக உள்ளதால், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 19-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளவாறு ரூ.2,500-5000+500 என்ற திருத்திய சிறப்பு ஊதிய ஏற்றமுறையினை, தர ஊதியத்துடன், பொது நூலகத் துறையில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்களுக்கு வழங்கலாம் என்றும், அதனால் அரசுக்கு ஏற்படும் செலவினத்தை அரசு கருவூலத்திலிருந்து பெறவும், பின்னர், மேற்படி செலவினத்தை நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து அரசு நிதிக்கு திரும்ப செலுத்த அனுமதியளித்தும் அரசாணை பெற்று வழங்குமாறும் பொது நூலக இயக்குநர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

3) பொது நூலக இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன்படி, பொது நூலகத் துறையில் ஊர்ப்புற நூலகங்களில் ரூ1,500/- தொகுப்பூதியம் பெற்று பணியாற்றிவரும் ஊர்ப்புற நூலகர்களின் பணி சிறப்பானதாக உள்ளதால் இவ்வூர்ப்புற நூலகர்களுக்கு அரசாணை (நிலை) எண் 234, நிதித் (ஊதியக்குழு) துறை, நாள் 01.06.2009-இல் பத்தி 19-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளவாறு ரூ.2,500-5000+500 என்ற திருத்திய சிறப்பு ஊதிய ஏற்றமுறையினை, தர ஊதியத்துடன், வழங்கலாம் என்றும், அதனால் அரசுக்கு ஏற்படும் செலவினத்தை அரசு கருவூலத்திலிருந்து பெறவும் அரசு ஆணையிடுகிறது. மேற்படி

செலவினத்தை நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து அரசு நிதிக்கு திரும்ப செலுத்த அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4) மேலும் இவ்வரசாணை அரசால் அவையில் அறிவிப்பு வெளியிட்ட நாள் (15.07.2009) முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.70850/கல்வி-II/2009, நாள் 30.11.2009-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ம.குற்றாலிங்கம்**

**அரசு முதன்மைச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

பொது நூலக இயக்குநர், சென்னை – 2.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்</u>

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நிதித் (கல்வி II) துறை, சென்னை – 9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
School Education Department Web Site.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
நேர்முக முதுநிலை உதவியாளர்,
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.